**Starting time 11.18 A.M.**

## <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No. 351/2002**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Janaki, Gr. III Bench Clerk of this court, on 18.07.2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** நான் இவ்வழக்கில் எனக்காகவும் மற்ற இரண்டு வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கின்றேனா என்றால், ஆமாம். இவ்வழக்கின் 1-ஆம் வாதி ஆறுமுகம் சர்வே எண் 72/14-ல் எவ்வளவு நிலம் அனுபவம் செய்து வருகிறார் என்றால், 16 செண்ட் அனுபவித்து வருகிறார். அதுபோல் ஆறுமுகம் 16 செண்ட் அனுபவித்து வருகிறார் என்பதற்கு ஆதாரமாக அனுபவச் சான்று எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். அதுபோல் அனுபவ சான்று எதுவும் ஒப்படைக்கவில்லை என்றும் நான் ஒப்படைத்ததாக வழக்கிற்காக வேண்டி சொல்கிறேன் என்றால், சரியல்ல. சர்வே எண் 72/17-ல் நான் 1 செண்ட் நிலம் அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளதற்கு அனுபவச் சான்று எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். அதுபோல் அனுபவ சான்று எதுவும் ஒப்படைக்கவில்லை என்றும் நான் ஒப்படைத்ததாக வழக்கிற்காக வேண்டி சொல்கிறேன் என்றால், சரியல்ல. அதே போல் சர்வே எண் 72/15-ல் 3-ஆம் வாதி பெரியசாமி 75 செண்ட் நிலம் அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளதற்கு அனுபவச் சான்று எதுவும் தாக்கல்

செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். அதுபோல் அனுபவ சான்று எதுவும் ஒப்படைக்கவில்லை என்றும் நான் ஒப்படைத்ததாக வழக்கிற்காக வேண்டி சொல்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்கள் தரிசு நிலமா அல்லது பட்டா நிலமா என்றால், இதுநாள் வரை பட்டா வழங்கவில்லை, ஆனால் பட்டா வழங்க கேட்டு வருகிறோம். பட்டா வழங்க கேட்டு வருவதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. நான் அனுபவித்து வருவதாக சொல்லியுள்ள சர்வே எண் 72/17-ல் பாதை இருப்பதாக வருவாய் துறை ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதும் எங்கள் தாயார் எல்லம்மாள் மூலமாக எங்களுக்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எல்லம்மாள் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.2 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் தாவா சொத்துக்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது, அதை அடுத்த வாய்தாவில் ஒப்படைக்கிறேன். எனது அம்மா சொத்தை கிரயம் பெற்ற பிறகு, எனது அம்மாவின் கிரயதாரர்கள் தாவா சொத்துக்களை எனது அம்மாவுக்கு ஒப்படைத்ததாக சொல்லியுள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனது அம்மா எல்லம்மாள் தாவா சொத்துக்களின் அருகிலுள்ள பட்டா நிலங்களை 01.05.1955 அன்று கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். அந்த கிரயப் பத்திரத்திலோ அல்லது வேறு ஆவணத்திலோ தாவா சொத்துக்களை எனது அம்மாவுக்கு ஒப்படைத்ததாக எழுதப்பட்டுள்ளதாக என்றால், எழுதப்பட்டுள்ளது, அந்த ஆவணத்தையும் அடுத்த வாய்தாவில் ஒப்படைக்கிறேன். இவ்வழக்கு தாக்கல் செய்த 19 ஆண்டு காலத்தில், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் தாவா சொத்துக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகள் எதுவும் தாவா சொத்துக்கு சம்மந்தப்பட்டதில்லை என்றால், சரியல்ல. தாவா சர்வே எண் 72/17-ன் மேற்கில் ஓடை செல்கிறது என்றால், சரிதான். ஓடைக்கு மேற்கே சர்வே எண் 71/2, 72/2, 72/3, 72/14, 183/1 ஆகிய எண்களில் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு சொந்தமான பட்டா நிலங்கள் என்றால், சரியல்ல, அந்த நிலங்கள் புறம்போக்கு நிலங்களாகும். மேற்படி

நிலங்கள் புறம்போக்கு நிலங்கள் அல்ல என்றும், அந்த நிலங்கள் பட்டா நிலங்கள் என்றும், அதை முத்தம்மாள், கங்கைய பண்டாரம் என்பவர்களிடமிருந்து சுந்தரி என்பவர் கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரியல்ல. முத்தம்மாள், கங்கைய பண்டாரம், மருதை ஆகியோர்களின் நிலங்களுக்கு சர்வே எண் 72/17-ன் வழியாகத்தான் பாதை உள்ளது என்றும், அந்த பாதையின் வழியாகத்தான் அவர்களது நிலங்களுக்கு சென்று வருகிறார்கள் என்றால், சரியல்ல. தேவியாக்குறிச்சியிலிருந்து சிவசங்கராபுரம் கிராமத்திற்கு வழக்கு சொத்தை ஒட்டி ஒரு பாதை செல்கிறது என்றால், சரிதான். அந்த பாதையானது மேற்கு நோக்கி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் நிலம் வரை செல்கிறது என்றால், சரியல்ல. எங்களுக்கு சொந்தமான பட்டா நிலங்கள் எதிலும் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் பாதை உரிமை எதுவும் கேட்கவில்லை என்றால், சரிதான். புலவரைபடம், அ பதிவேட்டில் சர்வே எண் 72/17-ல் பாதையாக வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல, அது பொய்யான தகவலாகும். சர்வே எண் 72/17-ல் பாதை இருப்பதாக வகைபாடு செய்யப்பட்டது தவறு என்றும், அவ்வாறு செய்ததை மாற்ற வேண்டும் என்று வருவாய் துறையில் மனு எதுவும் செய்தேனா என்றால், செய்தேன். அவ்வாறு கொடுத்த மனுவின் நகல் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதையும் பின்னர் ஒப்படைப்பேன். நான் சொல்வதுபோல் 72/17-ல் உள்ள நிலம் விவசாய நிலம் இல்லை என்றும், அதில் பாதை தான் உள்ளது என்றால், சரியல்ல, அதில் தென்னை மரம்தான் உள்ளது. அவ்வாறு தென்னை மரம் உள்ளதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதையும் பின்னர் கொடுப்பேன். நான் அசல் வழக்கு எண் 208/2006 என்ற வழக்கை ஏற்கனவே 6 நபர்கள் மீது தாக்கல் செய்திருந்தேன் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் பிரதிவாதிகளாக காட்டப்பட்டவர்கள் வழக்கில் ஆஜராகவில்லை என்றால், சரியல்ல, அவர்கள் வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்தினார்கள். இவ்வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டுதான் மேற்படி அசல் வழக்கு எண் 208/2006 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் எனக்கு ஆதாரமாக ஒரு ஆவணத்தை தயாரிக்க வேண்டி மேற்படி வழக்கை எனக்கு

சாதகமானவர்கள் மீது தாக்கல் செய்து ஒருதலைபட்ச தீர்ப்பை பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல. மேற்படி வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் உண்மையான தாவா சொத்துக்கள் குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சர்வே எண் 72/17 சம்மந்தமாக எந்த ஆதாரத்தையும் தாக்கல் செய்யாமல்தான் மேற்படி வழக்கிலும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. முத்தம்மாள், கங்கைய பண்டாரம் என்பவர்களிடமிருந்து கடந்த 05.06.2013 அன்று சுந்தரி என்பவர் கிரயம் பெற்ற நிலங்களுக்கு சர்வே எண் 72/17-ல் உள்ள பாதையின் வழியாக இன்று வரை சென்று பயன்படுத்தி வருகிறார் என்றால், சரியல்ல. இவ்வழக்குடன் கூட்டாக விசாரணையில் உள்ள அசல் வழக்கு எண் 107/2003 ல் ஆணையர் நியமனம் செய்து சர்வே 72/17-ல் உள்ள சொத்துக்களை ஆணையர் நில அளவையர் மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியுடன் பார்வையிட்டார் என்றால், சரிதான். அதுபோல் பார்வையிட்ட பிறகு சர்வே எண் 72/17-ல் பாதை இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அது பொய்யான தகவல் ஆகும். அளந்தபோது நானும் எனது வழக்கறிஞரும் இருந்தோமா என்றால், ஆட்சேபனை தெரிவித்துவிட்டு வந்துவிட்டோம். சர்வே எண் 72/17-க்கு அருகில் 50 அடிதூரத்தில் எனது வீடு உள்ளது என்றால், சரியல்ல, 1000 அடி தூரத்தில் உள்ளது. சர்வே எண் 72/17 ஐ ஒட்டிதான் எனது பட்டா நிலம் உள்ளது என்றால், சரிதான். இவ்வழக்கின் 3-வது வாதி பெரியசாமி இவ்வழக்கின் 3-வது அயிட்ட சொத்தை இன்று வரை அனுபவித்து வருகிறாரா என்றால், இல்லை, அவர் நிலத்தை என்னிடம் கொடுத்துவிட்டார். ஆனால் தாவாவில் பெரியசாமி அனுபவித்து வருகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில், பெரியசாமி அனுபவித்து வந்த சொத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டார் என்று சொல்லியுள்ளது எந்த தேதி என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஒப்படைத்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், புறம்போக்கு நிலம் என்பதால் ஆவணம் எதுவும் எழுதிக் கொள்ளவில்லை. சர்வே எண் 72/17-ல் உள்ள பாதையை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் பயன்படுத்துவதை

தடுத்தால் அவர்கள் நிலத்தை எனக்கு விற்றுவிடுவார்கள் என்பதால்தான் பாதையை பயன்படுத்த தடை செய்து வந்தேன் என்றால், சரியல்ல, அவர்களுக்கு அவர்களது நிலத்தை ஒட்டியே பாதை வசதி உள்ளது. பிரதிவாதிகள் நிலத்திற்கு பாதை எதுவும் இல்லை என்றால், சரியல்ல. 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் நிலம் பட்டா நிலம் என்றும், தரிசு நிலம் என்று சொல்வது பொய் என்றால், சரியல்ல. சர்வே எண் 72/17-ன் தென்புறமும், வடபுறமும் எனக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 72/17-ல் உள்ள சொத்து கிழமேலாக உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 72/17-ல் உள்ள சொத்து 18 அடி அகலத்திலும், 290 அடி நீளத்திலும் அமைந்துள்ளது என்றால், சரியல்ல. இருபுறமும் எனக்கு சொந்தமான நிலங்கள் இருப்பதால், நான் அதன் அகலத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமிப்பு செய்து 8 அடி அகலத்தில் தான் தற்போது உள்ளது என்றால், சரியல்ல. அவ்வாறு நான் ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதியை மீண்டும் பாதையாகவே ஒப்படைக்க கடமை பட்டவர் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்கள் அரசு புறம்போக்கு நிலம் என்பதாலும், பாதையாக உள்ளதாலும் அதை பிரதிவாதிகள் பயன்படுத்த தடை செய்ய எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 351/2002-ஐ தள்ளுபடி செய்தும், எங்கள் மீது தாக்கல் செய்துளள் 107/2003-ன் வாதிகள் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.05 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**